1986 மே 14]

வடபழனி—போரூர் சாலை.

656—(*வினா எண் 8804) திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடபழனியிலிருந்து போரூர் செல்லும் ஆற்காடு சாலையை செப்பனிட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: கடந்த நவம்பர் 1985-ல் ஏற்பட்ட புயல் வெள்ள சேதங்களில் இச்சாலையில் 7/0-லிருந்து 12/0 வரை உடனடியாக நொடிகள் போடப்பட்டு சரி செய்யப் பட்டிருக்கிறது. நிரந்தர சீராக்கத்தின் கீழ் மோசமான பகுதி களை 7/1-லிருந்து 8/8 வரை மற்றும் 11/9-லிருந்து 12/0 வரை ரூ. 5.55 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவ்வேலைகளில் ஜல்லி கள் சேகரிக்கும் வேலை தற்போது நடைபெற்று வருகிறது. இவைகள் யாவும் மே மாதம் இறுதிக்குள்ளாக முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெடுஞ்சாலையிலே அமைச்சரவர்கள் குறிப் பிடும் முறையில் எந்த வேலையும் நடைபெறவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இலட்சக்கணக் கான மக்கள் போய் வரும் அந்த நெடுஞ்சாலையை உடனடியாகச் செப்பனிட்டு, முழுமையாகத் தார் ரோடாகப் போடுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, நான் இங்கே ஜல்லி சேகரம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். அநேகமாக அந்த வேலை நடப்பதை நம் மால் பார்க்க முடியாது. ஜல்லி சேகரம் என்பது, எங்கேயிருந்து, எப்படிப்பட்ட ஜல்லி சேகரிக்கப்பட வேண்டுமென்று அப்ரூவ் செய்த பிறகு தான் கொண்டு வருவார்கள். இருந்தாலும், மே மாதம் இறுதிக்குள் செய்து முடித்துவிடுவோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படி அவர்கள் செய்யவில்லை என்றால், ஏன் தவறான தகவலைச் கொடுத்தீர்கள் என்று அந்த அதிகாரி யின் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: தலைவரவர்களே, வட பழனியிலிருந்து போரூர் செல்லும் சாலை பெரும்பாலும் சிங்கிள் ரோடாக இருப்பதால் அதை டபிள் ரோடாக ஆக்குவார்களா? மேலும், நெடுஞ்சாலையில் மின் கம்பங்கள் நடு ரோட்டில் இருக்கின்றன. எனவே இன்றைக்கு போக்குவரத்து அதிகமாக இருக்கின்ற நேரத்தில் அந்த மின் கம்பங்கள் போக்குவரத்திற்குத்

தடையாக இருக்கின்றன. இதற்கெல்லாம் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும், ஏ.வி.எம். இராஜேஸ்வரி சினிமா தியேட்டர் அருகில் உள்ள அந்தச் சாலை நீண்ட காலமாக—சுமார் பத்தாண்டு காலத்திற்கும் மேலாக போட்டு போட்டு மீண்டும் மீண்டும் செப்பனிடாமலே இருக்கிறது. இதைச் சரி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இந்த வினாவிற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. தனியாக அதைப்பற்றி எடுத்து ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக அதை எழுதிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன்: தலைவரவர்களே, சென்னை—திருவள்ளூர் நெடுஞ் சாலை இதே முறையில் இருந்து கொண்டு இருக்கிறது. அதையும் அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து ரிப்போர் செய்ய ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஏற்கனவே நான் சொன்னபடி தனிப்பட்ட முறையிலே அதற்கான கடிதம் வருகின்ற பொழுது நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம். ஏற்கனவே கொடுத்து இருக்கிறீர்கள், நடவடிக்கை எடுக்கப்படும். தொடர்ச்சியாக நிதி நிலைமைகளைப் பொறுத்து, எது எது அதிகமாகப் பழுது பட்டிருக்கிறதோ அந்த அடிப்படையில் எடுத்து வருகிறார்கள். இதைப் பற்றித் தனிக் கவனம் செலுத்த ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ம. ஆபிரகாம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ. வி. எம். ஸ்டுடியோவிற்குச் செல்லும் ஆற்காடு சாலை ஓராண்டுக் காலமாகப் போடப்பட்டு வருகிறது. இது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? இப்படி ஓராண்டுக் காலமாக பிடிவாதமாக அந்தப் பாதையை முடிக்காமல் இருக்கிறார்கள். இப்படி முடிவு பெறாமலே இருப்பதால் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு இன்னலைத் தருகின்ற அளவிற்கு இருக்கிறது. இந்த நிலைமையில் அந்த ஒப்பந்தக்காரர்கள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அந்த வழியாக ஒரு நிகழ்ச்சிக்குப் போகும் பொழுது நான் பார்த்தேன். அப்பொழுது அதிகாரிகளுக்கு அதைப் பற்றிச் சொன்னேன். ஒப்பந்தக்காரர்கள் சம்பந்தமாகப் பிரச்சினை ஏற்பட்டுவிட்டால், அந்த ஒப்பந்தத்தில் ஏதாவது முடிவு வராமல் மீண்டும் வேலையைத் துவக்க முடியாமல் இருக்கிறது. சில இடங்களில்

1986 மே 14]

பாதை சரியாக செய்யப்படவில்லை என்று நாம் போகின்ற பொழுது சொல்லி, ஜல்லி மோசமாக இருக்கிறது, பாதை சரியாக அமைக்கப்படவில்லை என்று சொல்லி, வேலை நடக்கின்ற பொழுது விஜிலன்ஸ் அல்லது மேலதிகாரிகள் நடவடிக்கை எடுத்து நோட்டீஸ் கொடுத்து விட்டால் உடனே வேலை நின்று போய் விடுகிறது. சில நேரங்களில் ஒப்பந்தக்காரர்கள் நீதி மன்றத்திற்குப் போய்விடுகிறார்கள். பிறகு உடனடியாக அந்தப் பாதையை போட முடியாத அளவிற்குச் சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. ஆதலால் தான் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. இருந்தாலும் கூட அதை விரைவுபடுத்திச் செய்வதற்கு நாம் என்ன செய்ய முடியும் என்று பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேஷனல் ஹைவேஸ், ஹைவேஸ் போன்ற இடங்களில், பல இடங்களில் மழைக் காலங்களில் ஏற்படுகின்ற சேதத்தால் ரோடுகள் அடித்துக் கொண்டு போவதும், மாறி மாறி பல இலட்சக்கணக்கான ரூபாய்களைப் போட்டு, உடனடியாக ரோடுகளைப் போட்டும் அங்கே சரியான வகையில் தண்ணீர் போவதற்கு வாராவதிகள் அல்லது சிறிய மேம்பாலங்கள் அல்லது பெரிய மேம்பாலங்களானாலும் சரி, இந்த நிலையினால் தான் அடிக்கடி அவ்வளவு பெரிய தொகை செலவு செய்தும் நமக்குப் பயன் இல்லாமல் போகிறது என்பதை அரசு அறியுமா? உடனடியாக, பல வாராவதிகளை அமைப்பதற்கு அரசு முன் வருமா?

(முற்பகல் 10–10)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அரசு அறியும். அரசு முன் வர ஆசைப்படுகிறது. ஆனால், போதிய நிதி வசதியில்லாத காரணத்தால்தான் படிப்படியாக எடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, இந்த நிலைமைகள் சீர் செய்யப்பட வேண்டுமானால், நிதி வசதி சீராகின்ற காலத்திலேதான் சீர் செய்யப்படும். ஆனால், ஆண்டுக்குக் கொஞ்சமாக எடுத்து, எது மிக அதிகமாக பாதிக்கப்படுகிறதோ அந்த அடிப்படையிலே படிப்படியாக எடுத்து நாம் வேலைகளை மேற்கொண்டிருக்கிறோம். எனவே, நிதியின் காரணமாக, இந்த நிலை ஏற்படுகிறதே தவிர, அரசுக்குத் தெரியாமலோ அல்லது அரசு விரும்பாமலோ அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பேருந்து செல்லும் சாலைகள் அனைத்தையும் தார்ச் சாலைகளாக அமைக்கும் திட்டம் இருந்ததே, அந்தத் திட்டம் இப்பொழுது எந்த நிலையில் உள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தார்ச் சாலைகளாக அமைக்க வேண்டுமென்ற நிலையிலேதான் இருக்கிறது. இப்பொழுது ஏறத்தாழ 9,000 கிலோ மீட்டர் நெடுஞ்சாலைக்குச் சொந்தமாக வைத்துக் கொள்வதா, அல்லது உள்ளாட்சித் துறைக்குக் கொடுத்து விடுவதா என்ற ஒரு பிரச்சினை வந்தது. முதல் அமைச்சருடைய தலைமையிலே ஒரு கூட்டம் நடத்தப்பட்டு, அந்தக் கூட்டத்திலே விவாதிக்கிற பொழுது, இந்தப் பொருளும் அங்கே வந்தது. அதிலே நெடுஞ் சாலைத் துறைக்குக் குறிப்பிட்ட கிலோ மீட்டர் தூரத்தையும் நம்முடைய உள்ளாட்சித் துறைக்குக் குறிப்பிட்ட கிலோ மீட்டர் தூரத்தையும் இப்பொழுது ஒதுக்கி இருக்கிறார்கள். எனவே, அந்த, அந்தத் துறை நிதி நிலைக்கேற்ப அந்த பிளாக் டாப் செய்கின்ற வேலையை இப்பொழுது செய்து வருகிறது.

பொம்மியம்பட்டியில் சத்துணவுக் கூடம்.

750—(*வினா எண் 5171) திரு. செ. செம்மலை : மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் மேச்சேரி ஒன்றியம் பொம்மியம்பட்டி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் ஒரு சத்துணவு மையம் துவக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : இது பற்றிய கருத்துரு ஏதுவும் அரசால் பெறப்படவில்லை. பெறப்பட்டால் அரசு அதனை விதிகளுக்குட்பட்டு பரிசீலனை செய்யும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நடவடிக்கை இப்போதைக்கு இல்லையென்று சொன்னாலும், அந்த இடத்திலே ஒரு சத்துணவுக் கூடம் அமைக்க வேண்டுமென்ற அவசியத்தையும் தேவையையும் வலியுறுத்தி சேலம் மாவட்ட ஆட்சியாளர் ஒரு முறையான முன்மொழிவை அனுப்பியிருக்கிறார்கள். அந்த முன்மொழிவு அரசுக்குக் கிடைக்கப் பெற்றவுடன் அந்த இடத்தில் சத்துணவு கூடம் அமைப்பதற்கான ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சத்துணவுக் கூடம் ஆரம்பிக்க வேண்டுமென்றால், குறைந்தது 70 குழந்தைகள் இருக்க வேண்டும். அந்தக் குழந்தைகள் பக்கத்தில் இருக்கிற சத்துணவுக் கூடங்களுக்குச் செல்வதற்கு வெகுதூரம் இருக்கிறது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் உணர்ந்து அரசுக்கு அறிவிப்பாரானால் அங்கே ஒரு புதிய சத்துணவுக் கூடம் ஆரம்பிப்பதற்கான வழிவகைகளை அரசு செய்யும்.